Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC 50/2022**

Preliminary Register

Deposition of **DW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வெங்கடேஷ் | Father Name | : | பாலன் |
| Village | : | | Taluk | : | நீடாமங்களம் |
| Caste | : | | Calling | : | மேலாளர்- ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா - நீடாமங்களம் கிளை |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 3rd day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி-</u>**

நான் காசோலை எண். 431925 திருப்பப்பட்டதற்கான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள 'All our stamps cancelled' என்ற வாசகத்திற்கு அன்றைய தின பரிவர்த்தனை முடிவுற்றதை குறிப்பதற்கான குறியீடு தான் மேற்படி வாசகம். அதன் பிறகு மேற்படி காசோலையை 6 மாதத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் திரும்ப சமர்பிக்கலாம்.

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் இவ்வழக்கின் எதிரியின் வங்கிக் கணக்கு பரிவர்த்தனை 2019 லிருந்து 2023 ம் ஆண்டுவரைக்கான பதிவேட்டின் கணினி நகலை எடுத்து வந்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டின் கணினி நகல் **பு.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் வங்கி கணக்கின் வழக்கு காசோலை தாக்கல் செய்யப்பட்டதற்கான கணினி நகல் கொண்டு வந்துள்ளேன் என்றால் சரிதான். அது **பு.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் வங்கி காசோலை 431925 கடந்த 31.03.2022 அன்று வலங்கைமான் பாரத ஸ்டேட் வங்கி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கியின் மூலம் அன்றைய தினமே போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது என்றால் சரிதான். இரு வங்கிகளும் பாரத் ஸ்டேட் வங்கியின் கிளைகள் என்பதால் கோர் பேங்கிங் முறையில் செயல்படுகிறது என்றால் சரிதான். அதனால் எந்த வங்கியில் காசோலை தாக்கல் செய்யப்படுகிறதோ அந்த வங்கியால் வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கை ஆய்வு செய்து போதிய தொகை உள்ளதா என்ற விபரம் அறிந்து காசோலை தொகையை வழங்கவோ அல்லது காசோலையை திருப்பவோ இயலும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள **பு.சா.ஆ.7 ல்** கடந்த 31.03.2022 அன்று எதிரியின் வங்கிக் கணக்கில் காசோலைக்குண்டான தொகை உள்ளதா என்றால் தொகை இல்லை. அன்றைய தேதியில் எதிரியின் வங்கிக்கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்றால் 75 ரூபாய் 46 பைசா இருந்தது. அதனால் தான் **பு.சா.ஆ.2** ல் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை செல்லுபடியாகும் காலம் காசோலையில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து 3 மாத காலம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் 6 மாத காலம் காசோலை செல்லுபடியாகும் என்று தவறுதலாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். காசோலைக்கு போதிய தொகை இல்லை என்பதால் எந்தவித பணப்பரிவர்த்தனை நடைபெறவில்லை என்றாலும் கணக்கு பரிவர்த்தனை பட்டியலில் குறிப்பிடப்படாது என்றாலும் அதுதான் வங்கி நடைமுறை என்றாலும் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.03 11:03:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.